செய்தி வெளியீடு எண்: 802 நாள்: 01.11.2018

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 31.10.2018 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை, இராயபுரத்தில் உள்ள அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துயிற்கூடங்கள், கழிவறைகள், குளியலறைகள் உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள வரவேற்பு இல்லக் கட்டடத்தை திறந்து வைத்தார்கள். மேலும், 8 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மதுரையில் உள்ள அன்னை சத்தியா அரசு குழந்தைகள் காப்பகம் மற்றும் தருமபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளியில் உள்ள சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்லம் ஆகியவற்றில் கட்டப்படவுள்ள புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

சென்னை, இராயபுரத்தில் செயல்பட்டு வரும் சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்தில், தற்காலிக இல்லப் பராமரிப்பு தேவைப்படும் சிறுவர்களுக்காக வரவேற்பு இல்லம் செயல்பட்டு வருகிறது. இவ்வரவேற்பு இல்லத்தில், சென்னை மாவட்டத்தை சேர்ந்த சிறுவர்கள் மட்டுமின்றி, வெளி மாவட்டங்கள் மற்றும் வெளி மாநிலங்களிலிருந்து வீட்டை விட்டு வெளியேறிய சிறுவர்கள், பள்ளிக்குச் செல்லாமல் கடற்கரை, இரயில் நிலையம், பேருந்து நிலையம் போன்ற இடங்களில் சுற்றித் திரியும் சிறுவர்கள், குழந்தைத் தொழிலாளர்கள், கொத்தடிமைகளாக இருந்து மீட்கப்படும் சிறுவர்கள் போன்றவர்கள் தங்க வைக்கப்படுகின்றனர். இங்கு சிறுவர்களுக்கு தேவையான உணவு, உடை மற்றும் இதர அடிப்படை தேவைகள் வழங்கப்படுவதுடன், வளமைய ஊழியர்கள் மூலம் மனநல ஆலோசனைகளும், முறைசாராக் கல்வி, தொழிற் கல்வி சார்ந்த பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

2016–17ஆம் ஆண்டு சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை மானியக் கோரிக்கையில், சென்னை, இராயபுரத்தில் செயல்படும் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கான வரவேற்பு இல்லக் கட்டடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால், புதிய கட்டடம் கட்டப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது. அந்த

அறிவிப்பிற்கிணங்க, சென்னை, இராயபுரத்தில் உள்ள அரசினர் குழந்தைகள் இல்ல வளாகத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில், துயிற்கூடங்கள், கழிவறைகள், குளியலறைகள் உள்ளிட்ட அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் புனரமைத்து கட்டப்பட்டுள்ள வரவேற்பு இல்லக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 13.6.2018 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், மதுரையில், மாநகராட்சி கட்டடத்தில் இயங்கி வரும் அன்னை சத்தியா அரசு குழந்தைகள் காப்பகக் கட்டடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டப்படும் என்றும், தருமபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளியில் உள்ள சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு நவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டப்படும் என்றும் அறிவித்தார்கள்.

அதன்படி, மதுரையில் உள்ள அன்னை சத்தியா அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய கட்டடம் மற்றும் தருமபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளியில் உள்ள சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு 3 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய கட்டடம் ஆகியவற்றிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. மணிவாசன், இ.ஆ.ப., சமூக பாதுகாப்புத் துறை ஆணையர் திரு.ஆர். லால்வேனா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 1.11.2018**